# 6ஆம் வகுப்பு தமிழ்

## செய்யுள் : 1. பராபரக் கண்ணி

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ------
   **அ) தம்முயிர்** ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்
2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----
   **அ) இன்புற்றிருக்க** ஆ) இன்புறுறிருக்க இ) இன்புற்றுஇருக்க ஈ) இன்புறுஇருக்க
3. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -----
   அ) தானெ + என்று **ஆ) தான் + என்று** இ) தா + னென்று ஈ) தான் + னென்று
4. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ---------
   அ) அழிவு ஆ) துன்பம் **இ) சுறுசுறுப்பு** ஈ) சோகம்

**நயம் அறிக**

பராபரக்கண்ணி பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

| எதுகை | மோனை |
|---|---|
| தம்உயிர்போல் - செம்மையருக்கு<br>அன்பர்பணி - இன்பநிலை<br>எல்லாரும் - அல்லாமல் | தம்உயிர்போல் - தானென்று - தண்டருள் கூர்<br>செம்மையருக்கு - செய்வேன்<br>அன்பர்பணி - ஆளாக்கி<br>இன்புற்று - இருக்க<br>அல்லாமல் - அறியேன் |

**குறுவினாக்கள்**

**1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?**

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும்.

**2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?**

அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும்.

**சிறுவினாக்கள்**

**பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?**

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும். அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும். இன்பநிலை தானே வந்து சேரும். எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன்.

**சிந்தனைவினா**

**குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?**

குளிரால் வாடுபவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளான ஆடைகளை வாங்கிக் கொடுப்பது, நெருப்பு மூட்ட தேவையான தீப்பெட்டி, மண்ணெண்ணெய், விறகு போன்றவற்றை கொடுத்து உதவி செய்வேன். மேலும் அவர்களுக்கு சூடான நீர், டீ, அல்லது காபியைப் போன்றவற்றை நானே போட்டு அவர்களுக்குக் குடிக்க கொடுப்பேன். பாய், கம்பளிப் போர்வை, குல்லா போன்றவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களது குளிரைபோக்க என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வேன்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள் பற்றிக் கூறுக.**

**எங்கள் வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள்:**

எங்கள் ஊர் ஒரு கிராமமாகும். எங்கள் வீட்டில் ஆடு, மாடு, கோழி, நாய், பூனை, அணில், கிளி ஆகிய உயிரினங்கள் வளர்க்கப்படுகின்றன. நாய்களை நாங்கள் கட்டிப்போடுவதே இல்லை மேலும் அணில் மற்றும் கிளியை நாங்கள் கூண்டில் அடைப்பதே இல்லை. அவற்றை நாங்கள் சுதந்திரமாக விளையாட பறக்க விடுவோம். பொதுவாக நாய்க்கும் பூனைக்கும் ஆகாது என்று கூறுவார்கள். ஆனால், எங்கள் வீட்டில் அனைத்து உயிரினங்களும் ஒன்றாக இணைந்து விளையாடி மகிழும். வீட்டில் வளர்க்கும் உயிரினங்களை எங்கள் வீட்டில் ஒருவராகவே நாங்கள் கருதுகிறோம். தேவையான நேரங்களில் உணவு, தண்ணீர் போன்றவற்றை கொடுத்து அன்போடு நடந்துகொள்வோம். மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பை விட உயிரினங்கள் காட்டும் அன்பு மனிதர்கள் காட்டும் அன்பை விட உயர்ந்தது.

**2. நீங்கள் பிறர் மகிழும்படி செய்த நிகழ்வுகளைக் கூறுக.**

- ★ ஒரு நாள் சாலையில் கிடந்த பையை எடுத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். அதில் நிறைய பணம் இருந்தது அப்பணத்தை தவரவிட்டவரிடம் காவலர்கள் அப்பணத்தை திரும்பக் கொடுத்தனர். பையை நேர்மையாக காவல்நிலையத்தில் ஒப்படைத்ததால் காவலர்கள் மற்றும் பணத்தை தவரவிட்டவரிடம் பாராட்டைப் பெற்றேன்.
- ★ ஒருநாள் பேருந்தில் சென்று கொண்டு இருந்தபோது ஒரு வயதான பாட்டி பேருந்தில் ஏறினார். அவருக்கு யாரும் உதவவில்லை. நான் அமர்ந்து இருந்த இருக்கையை அவர்களுக்கு கொடுத்தேன்.
- ★ பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தபோது என் அம்மா உடல்நிலை சரியில்லாமல் படுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு தேநீர் வைத்துக் கொடுத்தேன். பிறகு மருத்துவரிடம் அழைத்துச் சென்றேன்.

# செய்யுள் : 2. நீங்கள் நல்லவர்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பரிசு பெறும்போது நம் மனநிலை ............. ஆக இருக்கும்.
   அ) கவலை ஆ) துன்பம் ***இ) மகிழ்ச்சி*** ஈ) சோர்வு
2. வாழ்வில் உயர கடினமாக ...... வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ***ஈ) உழைக்க***

**குறுவினாக்கள்**

**1. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?**

பழுத்து உன் உள்ளீடுகளை எல்லாம் முழுசாய்க்கொடு என்று பழம் வேரைப் பார்த்து நிச்சயமாகச் சொல்லாது, கொடுப்பது பழத்தின் இயல்பு பெறுவது வேரின் இயல்பு.

**2. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?**

உழைக்கும்போது நாம் புல்லாங்குழலாகி விடுகிறோம்.

**சிந்தனை வினா**

1. **நல்லவர் என்னும் பெயர் பெற நாம் என்ன செய்யலாம்?**

காலம் மாறிக்கொண்டேதான் இருக்கும். வயது முதிர்ந்தவர் தன் இளம் வயதிற்குத் திரும்பிச் செல்ல இயலாது. நேற்று நடந்தது இன்று நடைபெறாது. சிறகுகள் காற்றின் வேகத்திற்குச் சமமாக எழுவது போல் நாம் செயலாற்ற வேண்டும்.

நீங்கள் உழைக்கின்றபோது புல்லாங்குழலைப் போன்று மாறிவிடுகிறீர்கள். புல்லாங்குழல் அந்தந்தக் காலத்தில் நடைபெறுவனவற்றை ஓரிசையாக மாற்றிவிடுகிறது. உங்களிடம் உள்ள நன்மையைப் பற்றித்தான் பேசமுடியும். தீமைகளைப் பற்றி பேசக்கூடாது.

நீங்கள் சுயசிந்தனையுடன் ஒன்றுபட்டு இருக்கும் போது நல்லவராக இருக்கின்றீர்கள். என்னைப் போலவே இரு. உன்னிடம் உள்ள எல்லாவற்றையும் முழுமையும் கொடு என்று பழம் வேரைப் பார்த்து நிச்சயமாய் சொல்லாது. பயன் அனைத்தையும் கொடுக்கும் இயல்பு பழத்திற்குண்டு. பெற்றுக் கொள்ளும் இயல்பு வேரினுக்குண்டு.

நீங்கள் பேசும்போது விழிப்புடன் இருக்க வேண்டும். உங்கள் இலட்சியப் பாதையை நோக்கி நடக்கும் போது எடுத்தச் செயலை உறுதியாக நின்று செயலாற்றி வெற்றி பெற்றால் 'நீங்கள் நல்லவர்' என்று பாடல் கூறுகிறது.

2. **உங்கள் குறிக்கோளை அடைய நீங்கள் செய்யும் முயற்சிகளை எழுதுக.**

★ என்னுடைய குறிக்கோள் - வருங்காலத்தில் சிறந்த ஆசிரியராக இருப்பதே.

★ எனது சிறுவயது முதலே எனக்குள் பல விருப்பங்கள், இலட்சியங்கள் இருந்துகொண்டே இருக்கும். நானும் என் மனதில் தினமும் அவற்றை அசைபோட்டுக் கொண்டே தான் இருப்பேன். ஆனால், அவற்றுள் சிறந்து மற்றும் எனக்கு மிகவும் பிடித்த ஆசிரியப்பணியில் தொண்டு செய்து அனைத்து மாணவர்களையும் வளர்ச்சி பாதைக்கு அழைத்து சென்று இவ்வுலகையே என்னைப் பார்க்கச் செய்ய வேண்டும் என்பதே என்குறிக்கோள்.

★ ஆசிரியப்பணியே அறப்பணி அதற்கே உன்னை அற்பணி என்னும் டாக்டர். இராதாகிருஷ்ணனின் சொல்லிற்கு இனங்க ஆசிரியப்பணிக்காக என்னை அற்பணிக்கவேண்டும்.

★ என் விருப்பமே என்னுடைய குறிக்கோளாக மாற்றம் பெற்றுள்ளது. இந்த இலட்சியப் பாதையைக் கடப்பதற்கு எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைத் தாண்டி என் குறிக்கோளை நனவாக்குவேன்.

★ அதிகமாக புத்தகங்களை வாசிக்கிறேன். அவை உலக வரலாறு, இந்திய வரலாறு, உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும், அகராதிகள், உலகை வெல்வோம், உலக நாயகர்கள், சாதனையாளர்கள் வரலாறு, அறிவியல் கண்டுபிடிப்புகள், நாவல்கள், புதுக்கவிதைகள், இலக்கணம், இலக்கியங்கள், மொழி வரலாறு, உரைநடைகள் அறிவை வளர்ப்பது எப்படி என்று பல புத்தகங்களை வாசித்து வருகிறேன்.

★ திட்டமிட்டுச் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம் என்பதைபோல திட்டமிட்டு வாழ்வில் இலட்சிய குறிக்கோளை அடைவேன்.

## கற்பவை கற்றபின்

1. **உங்களது நிறை குறைகளைப் பட்டியலிடுக.**

**நிறைகள்:**

★ பிடிக்காதவர்கள் வீட்டிற்கு வந்தால்கூட புன்சிரிப்புடன் வரவேற்பேன்.
★ வயதில் மூத்தோர்க்கு மரியாதை வழங்குவேன்.
★ இயலாதவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.
★ நேரமேலாண்மையைக் கடைப்பிடிப்பேன்.
★ செய்யும் செயலை பெருமையுடன் எந்த வித பதட்டமும் இன்றி பொறுமையாக செய்வேன்.
★ உணவு மற்றும் குடிநீர் ஆகியவற்றை வீணாக்கமாட்டேன்.

**குறைகள்:**

★ ஒருசில நேரங்களில் சுயநலமாகச் சிந்திப்பேன்.
★ ஒரு செயலை உடனே செய்யாமல் காலம் தாழ்த்தி செய்வேன்.
★ சிறுபிரச்சனை என்றாலும் சோர்ந்து போய்விடுவேன்.
★ சிறு சிறு பொய்களைப் பேசுவேன்.
★ எப்போதும் எதிர்மறை சிந்தனைகளையே கொண்டிருப்பேன்.
★ சரியான செயல்களை எடுக்க தெரியாமல் குழம்புவேன்.

2. **உங்கள் நண்பர் மனம் சோர்ந்து இருக்கும்போது அவரைத் தேற்றும் வழிகள் குறித்துக் கலந்துரையாடுக.**

கதிரவன் : வணக்கம் நண்பர்களே! நாம் இப்போது நம் நண்பர் மனம் சோர்ந்து இருக்கும் சூழலில் அவரைத் தேற்றும் வழிகள் குறித்து கலந்துபேசலாம்.

இனியன் : சரி கதிரவன். நண்பர் தேர்வில் தோல்வியுற்று அதனால் வருந்தினான் எனில், அவனுக்குத் 'தோல்வியே வெற்றிக்குப் படிக்கல்' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்த வேண்டும். அடுத்தத் தேர்விற்கு எவ்வாறு படிக்க வேண்டும் எனக் கூறவேண்டும்.

அகிலன் : சரியாக சொன்னாய் இனியன். அதேபோல முக்கியமான வினாக்கள் எதுவெனக் கேட்டுப் படிப்பதற்கும், தினமும் படிக்கும் முறையையும் அவனுக்குக் கூறி அவனைத் தேற்றுவேன். பெற்றோரின் உதவியுடன் படிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவேன்.

தமிழ்செல்வி : நன்று அகிலன். வீட்டில் சகோதரர்களுடன் சண்டையிட்டு அதனால் மனம் சோர்ந்து இருந்தால், அவனுக்குப் பிறரிடம் விட்டுக் கொடுத்து வாழ்வதன் அவசியத்தைப் பற்றிக் கூறுவேன். விட்டுக் கொடுப்பவர் கெட்டுப்போவதில்லை.

கதிரவன் : நம்மை விடச் சிறியவராக இருந்தாலும் அவர்களிடமும் பணிவாகப் பேசினால் நாம் கூறுவதை அவர்கள் கேட்டுக் கொள்வார்கள். அன்போடு நாம் பேசினால் அனைவரும் நம்மிடம் பழகுவார்கள்.

செல்வி : மனம் வருந்துவதற்கான சூழலே வராது என்பதை உணர்த்துவேன். பெற்றோர்கள் நம்மைக் கடிந்துகொண்டால் நம் நன்மைக்குத்தான் என்பதைப் புரியவைத்து அவனைத் தேற்ற வேண்டும்.

அகிலன் : நாம் அனைவரும் மேற்கூறிய சூழலில் இருக்கும் நண்பர்களின் சோர்வை போக்க முயற்சி செய்வோம்!

## உரைநடை : பசிப்பிணி போக்கிய பாவை

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ……..
   அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு ***இ) மணிபல்லவத் தீவு*** ஈ) மாலத் தீவு
2. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் ……….
   அ) சித்திரை ***ஆ) ஆதிரை*** இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

| | |
|---|---|
| அ) செடிகொடிகள் | எங்கள் வீட்டுத் தோட்டத்தில் **செடிகொடிகள்** வளர்ப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. |
| ஆ) முழுநிலவு நாள் | மும்பையில் **முழுநிலவு நாள்** விழா கொண்டாடப்பட்டு வருகிறது. |
| இ) அமுதசுரபி | **அமுதசுரபி** அள்ள அள்ளக் குறையாமல் கொடுத்துக் கொண்டே இருக்கும். |
| ஈ) நல்லறம் | மணிமேகலை **நல்லறம்** புரியும் மங்கை என மன்னரால் பாராட்டப்பெற்றாள். |

**குறுவினாக்கள்**

**1. அமுதசுரபியின் சிறப்பு யாது?**

அமுதசுரபியில் இட்ட உணவானது அள்ள அள்ள குறையாமல் வளர்ந்துக்கொண்டே இருக்கும். அதனைக் கொண்டு எத்தனைப் பேருக்கு வேண்டுமானாலும் உணவழிக்கலாம்.

**2. 'கோமுகி' என்பதன் பொருள் யாது?**

கோமுகி என்பது பொய்கையின் பெயர். கோ என்றால் பசு. முகி என்றால் முகம். பசுவின் முகம் போன்று அமைந்திருப்பதால் இப்பொய்கை கோமுகி என்னும் பெயரைப் பெற்றது.

**சிறுவினா**

1. **மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சி அளித்தது?**

எங்குப் பார்த்தாலும் வெண்மணல் குன்றுகள், பூத்துக் குலுங்கும் செடிகொடிகள், அடர்ந்த மரங்கள், இடையே பொய்கைகள், மனதை மயக்கும் காட்சிகள் என மணிபல்லவத்தீவு காட்சி அளித்தது.

2. **மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?**

சிறைச்சாலையில் தண்டனை பெற்றுள்ளவர்கள் திருந்தி வாழ வழிகாண வேண்டும். சிறைக் கோட்டம் அறக்கோட்டமாக மாற வேண்டும்.

வாழ்க்கைக்கு அறம் சொன்ன வள்ளுவர் வாழ்ந்த நாடு இது. புத்தர் பிறந்து அறம் போதித்த பூமி இது. எவை நன்மைகள் எவை தீமைகள் என்பவற்றை எல்லாம் தக்க அறிஞர்களைக் கொண்டு சிறையில் உள்ளவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

மேலும் அவர்களுக்குப் பெற்றோரை மதித்தல், முதியோரை பேணல், உறவினர்களை அரவணைத்தல் போன்றவற்றை வலியுறுத்தும் அறநெறிக் கல்வியை அளிக்க வேண்டும் என்று மணிமேகலை மன்னரிடம் வேண்டினாள்.

**சிந்தனை வினா**

**அறச்செயல்கள் என்று நீங்கள் எவற்றை எல்லாம் கருதுகிறீர்கள்?**

- ★ அறநூல்களில் கூறப்பட்டுள்ள ஒழுக்க நெறிகளைக் கடைபிடித்தல்.
- ★ ஐம்புலன்களையும் அடக்கி நல்வழியில் செல்லுதல்.
- ★ பணிவுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.
- ★ பசித்தோர்க்கு உணவு அழிக்க வேண்டும்.
- ★ தன்னால் இயன்றவரை எளியோருக்கு உதவி செய்யவேண்டும்.
- ★ வயதில் மூத்தோருக்கு மரியாதை அழித்தல்.

## கற்பவை கற்றபின்

1. **பசிப்பிணி போக்கிய பாவை நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக.**

பசிப்பிணி போக்கிய பாவை என்னும் நாடகத்தை மாணவர்கள் தாங்களாகவே அதில் வரும் கதாபாத்திரங்களை வேடமிட்டு கொண்டு வகுப்பில் நடித்து மகிழவும்.

2. **பசிப்பிணி போக்கிய பாவை என்னும் நாடகத்தைக் கதை வடிவில் சுருக்கி எழுதுக.**

மணிமேகலை, மணிபல்லவத் தீவில் மணிமேகலா தெய்வத்தால் தனித்து விடப்படுகிறாள். பின் மணிமேகலை அங்குள்ள மணற்குன்றுகள், பூஞ்சோலை, பொய்கை முதலானவற்றைக் கண்டு களிக்கின்றாள். அப்போது அவள் முன் தீவதிலகை என்னும் தெய்வம் தோன்றி, "கோமுகிப் பொய்கையில் அமுதசுரபி தோன்றும் நாள் இது. ஆபுத்திரன் கையில் இருந்த அப்பாத்திரம் உன் கைக்குக் கிடைக்கும்" என்று கூறி அழைத்துச் செல்கிறாள். இருவரும் கோமுகிப் பொய்கையை வலஞ்செய்து வணங்க, அமுதசுரபி மணிமேகலையிடம் வந்து சேர்கிறது. அமுதசுரபியில் இடும் அன்னம் எடுக்க எடுக்கக் குறையாது பெருகும் என்று அதன் சிறப்பினைத் தீவதிலகை மணிமேகலைக்கு எடுத்துரைக்கிறாள். அமுதசுரபி சுரப்பது அருள் உடையவர்க்கே என்பதும் அது உனக்குக் கிட்டியுள்ளது. இதை வைத்து நீ பசிப்பிணி போக்குக என்றும் கூறினாள்.

தீவதிலகையின் அறிவுரைப்படி மணிமேகலை அமுதசுரபி பெற்று மீண்டும் புகார் நகருக்கு வருகிறாள். தன் தாயுடனும் சுதமதியுடனும் அறவண அடிகளைச் சந்திக்கிறாள். அவர் அவளுக்கு ஆபுத்திரன் கதையை எடுத்துரைக்கிறார். பசிப்பிணி நீக்கும் அறத்தைச் செய்யுமாறு அறிவுறுத்துகின்றார். காயசண்டிகை என்பாள் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதல் பிச்சை பெறுகிறாள்.

ஆதரவு அற்றவர்களுக்கும் காலில்லார், கண்ணில்லார், காதுகேளாதார் முதலியோர்க்கும் உணவளிக்கும் அறப்பணியைத் தொடங்கினாள். சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு உணவளிக்கிறாள். அரசன், இவள் அறிவுரையைக் கேட்டுச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுகிறான். இறுதியாக மணிமேகலை அரசனுக்கு நன்றி செலுத்தி விட்டு சிறைச்சாலையை விட்டு வெளியேறுகிறாள்.

# விரிவானம் : பாதம்

## மதிப்பீடு

**‘பாதம்’ கதையைச் சுருக்கி எழுதுக.**

காலணி தைக்கும் மாரி வழக்கம் போல் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருந்தார். காலையிலே துவங்கிய மழை இடைவிடாது பெய்து கொண்டிருந்தது. மாரி, எவரேனும் காலணி தைக்க வரக்கூடுமோ எனப் பசியுடன் காத்திருந்தார். வலுத்துப் பெய்யத் தொடங்கிய மழையுடன் காற்றும் சேர்ந்து கொண்டது.

அந்த நீண்ட தெருவில் எவருமில்லை. அவரும் ஒரு மரமும் எட்டுப் பழைய செருப்புகளும் தவிர. சினிமா தியேட்டரின் குறுகிய வலப்புறச் சந்தில் இருந்து குடையில்லாமல் நனைந்தபடி சிறுமியொருத்தி, அவன் அருகில் வந்து, தனது இடக்கையில் வைத்திருந்த காலணி ஒன்றைக் குனிந்து தரையிலிட்டு, தைத்து வைக்கும்படி சொல்லிவிட்டு அவர் நிமிர்ந்து அவளைப் பார்க்கும் முன்பு தெருவில் ஓடி அடுத்த வளைவின் சுவர்களைக் கடந்து சென்றாள்.

அந்த காலணி இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தது. வழக்கமான சிறுமிகளின் காலணிபோல் அல்லது வெல்வெட் தைத்துப் பூவேலை கொண்ட காலணியாக இருந்தது. மாரி கிழிசலைத் தைத்து வைத்துக் கொண்டு காத்திருந்தார். நிச்சயம் இரண்டு ரூபாய் கிடைக்கும் என்ற ஆவலில் இருந்தார் மாரி.

ஆனால், மாலை வரை அந்தச் சிறுமி வரவில்லை.இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா முடியும்வரை மரத்தடியில் காத்துக் கொண்டிருந்தார் மாரி. அவள் வரவில்லை காலணியைத் தன்னுடன் எடுத்துச் கொண்டு வீடு போய் சேர்ந்தார். மறுநாளும் அந்தச் சிறுமிக்காக காத்திருந்தார். அன்றும் அவள் வரவில்லை. இப்படியாக மூன்றாம் நாள் என நாட்கள் கழிந்து கொண்டே சென்றன. ஒரு நாள் இரவில் மாரியின் மனைவி அந்த காலணியைக் கண்டாள். அதன் வசீகரம் தொற்றிக்கொள்ளக் கையில் எடுத்துப் பார்த்தாள். அதைப் போட்டுப் பார்க்க ஆசைப்பட்டாள். தனது வலது காலில் அந்தக் காலணியை நுழைத்துப் பார்த்தாள். அது அவளுக்கு சரியாக இருந்தது. எனவே மற்றொரு காலணியைத் தேடிப் பையைக் கொட்டினாள். உள்ளே சப்தம்கேட்டு கோபமாக மாரி வந்தபோது, மனைவியின் வலக்காலில் இருந்த சிவப்புக் காலணியைக் கண்டார். ஆத்திரத்துடன் திட்டி, அவள் சொல்வதைக் கேட்காமல் கழற்றச் சொல்லிக் கிழிந்து விட்டதா எனப் பார்க்கக் கையில் எடுத்து உயர்த்தினார், கிழியவில்லை. காலணி அவருக்குள்ளும் ஆசையைத் தூண்டியது.

போட்டுப் பார்க்கலாமென, தன் வலக்காலைச் சிறிய காலணியில் நுழைத்தபோது அது தனக்கும் சரியாகப் பொருந்துவதைக் கண்டார். விசித்திரமாயிருந்தது மாரிக்கு. இந்தச் செய்தி நகரில் பரவியது. அந்த காலணியைப் போட்டுப் பார்க்க ஆசை கொண்ட பலர் தினமும் வந்து அணிந்து தமக்கும் சரியாக உள்ளதைக் கண்டு அதிசயித்துப் போயினர்.

அந்த காலணி ஒரு வயது குழந்தை முதல் வயசாளி வரை எல்லோருக்கும் பொருந்துவதாக இருந்தது. அதைக் காலில் அணிந்தவுடன் மேகத்துணுக்குகள் காலடியில் பரவுவது போலவும், பனியின் மிருது படர்வது போலவும் இருப்பதாக பலர் கூறினர். அந்தச் செருப்பை அணிந்து பார்க்க சிலர் பணம் தரவும் தொடங்கினர். தினசரியாகப் பணம் பெருகிக் கொண்டே போனது. வருடங்கள் புரண்டன. அவர் பசு இரண்டு வாங்கினார். வீடு கட்டிக் கொண்டார். வாழ்வின் உயர்ந்துக் கொண்டே இருந்தார். இப்போதும் சிறுமி வரக்கூடும் என்று பலர் முகத்தின் ஊடேயும் அவளைத் தேடிக் கொண்டிருக்கிறார். இப்படியாக அவரின் மூப்பது வருடங்கள் கழித்தன. ஓர் இரவில் காலணியோடு வீடு திரும்பும் போது, அதை திருட முனைந்த இருவர் தடியால் தாக்க, பலமிழந்து கத்தி கீழே வீழ்ந்தார். யாரோ அவரைக் காப்பாற்றினார்கள். காலணி திருடு போகவில்லை.

ஆனால் தலையில் பட்ட அடி அவரைப் பலவீனமடையச் செய்தது. வீட்டை விட்டு வெளியேறி நடக்க முடியாதவராகிப் போனார். அந்தச் சிறுமிக்காக அவர் மனம் காத்துக்கொண்டு இருந்தது. தனது மரணத்திற்கு முன்பு ஒரு முறை அவளைச் சந்திக்க முடியாதோ என்ற ஏக்கம் பற்றிக் கொண்டது.

ஒரு மழை இரவில் அந்தச் சிறுமி பெரியவளாக மாரியின் வீட்டிற்கு வந்து நின்றாள். அடையாளம் கண்டுகொண்ட மாரி அவளுடைய செருப்பை அவளிடம் கொடுத்தார். அந்தச் செருப்பின் சிறப்பை அவளிடம் கூறி, அவளைப்பற்றி அறிய ஆவலாக வினவினார் மாரி.

ஆனால் அவள் பதில் ஏதும் கூறாமல் சிரித்தபடியே மாரியின் வீட்டை விட்டு நீங்கினாள். வெளியே சென்றதும் அந்த வலதுகால் செருப்பை அணிந்தாள். அது அவளுக்குப் பொருந்தவில்லை.

## கற்பவை கற்றபின்

1. **தனக்குப் பெரும் வருமானத்தைத் தந்த காலணியைத் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென மாரி நினைத்தது ஏன்? வகுப்பில் கலந்துரையாடுக.**

அமுதா : மாரி செருப்பு தைத்து வாழும் ஒரு தொழிலாளி. அவரிடம் செல்வம் இல்லையென்றாலும் நேர்மை இருந்தது. அதனால் தான் மாரி அவ்வாறு நினைத்தார்.

அருண் : மாரி அந்த காலணியை வைத்து பெரும் பணம் சம்பாதித்து இருக்கிறார். அதேபோல் அவர் சம்பாதித்துக் கொண்டே நிம்மதியாக இருத்திருக்கலாமே?

அமுதா : ஆம். ஆனால் அது அவருடைய பொருள் இல்லையே! பிறர் பொருளைத் தான் வைத்திருக்கக்கூடாது என்று எண்ணி, அந்தக் காலணிக்கு உரியவர் சிறுமி எனவும், குழந்தையின் மனம் வருந்தும் எனக்கூட எண்ணியிருக்கலாம்.

அருண் : அதுவும் சரிதான். சிறுமி வந்தாள் காலணியைக் கொடுத்துதானே ஆகவேண்டும்.

அமுதா : மாரி மனசாட்சிக்குப் பயந்து, அக்காலணியை வைத்து பெரும் பொருளை ஈட்டினாலும் அது அவருடைய மனம் வருந்திக்கொண்டே இருந்தது. அந்தக் காலணி அதிசயமானதாக இருந்ததால் அவர் அக்காலணியை அச்சிறுமியிடம் ஒப்படைக்க எண்ணியிருப்பார்.

2. **மீண்டும் வந்த பெண்ணுக்குக் காலணி பொருந்தாதது ஏன்?**

சிறுமியாக இருந்தபோது அந்தக் காலணியைத் தைக்க தந்திருந்தாள். அக்காலணி அதிசயம் மிகுந்ததாகத் திகழ்கிறது. சிறிய அளவுடைய காலணி ஆயினும் அப்பெண்ணைத் தவிர அனைவருக்கும் பொருந்துவதாக அமைந்தது. சிறுமியாக இருந்தவள். வளர்ந்த பெண்ணாக வந்தபோது அவளுக்குப் பொருந்தவில்லை.

இருப்பினும் மற்ற சிறியவர் முதல் பெரியவர் வரை பொருந்தியமை அக்காலணியின் அதிசயத்தன்மையைக் காட்டுவதாகவே அமைகிறது, நம்மிடம் இருக்கும் ஒரு பொருள் நம்மைவிட பிறருக்கு அதிகம் பயனளிக்கும் என்பதைக் காட்டுவதாக இக்கதை அமைகிறது.

3. **மாரிக்குக் கிடைத்தது போன்ற காலணி உங்களுக்குக் கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? வகுப்பில் உரையாடுக.**

மாரிக்குக் கிடைத்தது போன்ற காலணி எனக்குக் கிடைத்தால் மாரியைப் போலவே நானும் பலர் அணிவதற்கு அக்காலணியைக் கொடுத்திருப்பேன். அவரைப் போலவே பணம் வசூலித்திருப்பேன். ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்து உதவுவேன். கல்வி கற்க வசதியில்லாத ஏழை மாணவர்களுக்கு பணம் கொடுத்து உதவுவேன். ஆதரவற்றோர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.

4. **பாதம் என்னும் கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட கருத்து யாது?**

நம்முடைய எண்ணங்களைப் பொறுத்துத்தான் நம்முடைய வாழ்க்கை அமைகிறது. நாம் மகிழ்ச்சி தரும் எண்ணங்களை நினைத்து வந்தால் நமக்கு மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை கிடைக்கும். துன்பம் தரும் எண்ணங்களையே நினைத்து வாழ்கிறவனுக்கு வாழ்க்கை சோர்வு நிறைந்ததாக அமையும். இக்கதையின் மூலம் ஏழ்மையிலும் நேர்மை முக்கியம் என்பதே நான் அறிந்து கொண்ட கருத்து ஆகும்.

# கற்கண்டு : பெயர்ச்சொல்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இடுகுறிப்பெயரை வட்டமிடுக.
   அ) பறவை **ஆ) மண்** இ) முக்காலி ஈ) மரங்கொத்தி
2. காரணப்பெயரை வட்டமிடுக.
   அ) மரம் **ஆ) வளையல்** இ) சுவர் ஈ) யானை
3. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக.
   அ) வயல் **ஆ) வாழை** இ) மீன்கொத்தி ஈ) பறவை

**குறுவினாக்கள்**

**1. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர்.

**2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

**3. காரணப்பெயர் என்றால் என்ன?**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும்.

**சிறுவினாக்கள்**

**1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.**

★ பொருட்பெயர்
★ இடப்பெயர்
★ காலப்பெயர்
★ சினைப்பெயர்
★ பண்புப்பெயர்
★ தொழிற்பெயர்

**2. அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.**

**பொருட்பெயர்**

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இ∴து உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

**எ.கா:** மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி.

**இடப்பெயர்**

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

**எ.கா:** சென்னை, பள்ளி, பூங்கா, தெரு

**காலப்பெயர்**

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

**எ.கா:** நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

**சினைப்பெயர்**

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

**எ.கா:** கண், கை, இலை, கிளை.

**பண்புப்பெயர்**

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

**எ.கா:** வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

**தொழிற்பெயர்**

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

**எ.கா:** படித்தல், ஆடுதல், நடித்தல்.

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதில் இடம் பெற்றுள்ள இடுகுறி, காரணப் பெயர்களை அறிந்து எழுதுக.**

நீர் வற்றிப்போன குளத்தில் செந்தாமரை, ஆம்பல், கொட்டி, நெய்தல் முதலான கொடிகளும் வாடியிருந்தன. நீர் நிரம்பி இருந்தவரை ஊர் மக்களும், விலங்குகளும் மரங்கொத்திபோன்ற பறவைகளும் பயன்படுத்தி மகிழ்ந்த குளம் அது. காலை நேரம் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. இப்போது அக்குளத்தைக் கண்டுகொள்வார் யாருமில்லை.

இடுகுறிப் பெயர் :

- குளம்
- நெய்தல்
- ஆம்பல்
- கொட்டி
- சூரியன்

காரணப் பெயர் :

- மரங்கொத்தி
- செந்தாமரை

## மொழியை ஆள்வோம்!

**பேசுக**

**உங்கள் பகுதியில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் குறித்துப் பேசுக.**

எங்கள் ஊரில் பல தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் முக்கியமான பணிகள் ஆதரவற்றோருக்கு ஆறுதல் அளிப்பது, கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்களை அரவனைத்து வளர்ப்பது, உடல் ஊனமுற்றோருக்கு தொண்டு செய்வது, இவர்கள் அனைவருக்கும் தேவையான கல்வியை அளிப்பது போன்ற சேவைகளை செய்து வருகின்றனர்.

மேலும் முதியோர்களைப் பாதுகாத்தல், மாணவர்களுக்கு கல்வி அளித்தல், வறுமையில் வாடுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுதல், வெள்ளம், புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், கைம்பெண்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுத்து பொருளாதார முன்னேற்றம் காணச் செய்தல், இளைஞர்களுக்கு உளவியல் பயிற்சியும் தொழிற்பயிற்சியும் அளித்தல்.

சமூக விழிப்புணர்வு ஊட்டல், உடல் ஊனமுற்றவர்களுக்கு நம்பிக்கையை அளித்தல், அவர்களுக்குத் தொழில் முனைய வங்கியில் கடனுதவி பெற்றுத் தருதல், இளைஞர்களுக்குச் சமூகசேவையில் ஈடுபடும் மனப்பக்குவத்தை வளர்த்தல், அரசின் நலத்திட்டங்களைப் பெற்றுத் தருதல் போன்ற பணிகளைச் சிறப்பாக செய்து வருகின்றன.

**படித்து மகிழ்க**

அன்பினில் இன்பம் காண்போம்;
அறத்தினில் நேர்மை காண்போம்;
துன்புறும் உயிர்கள் கண்டால்;
துரிசறு கனிவு காண்போம்;
வன்புகழ் கொடையிற் காண்போம் ;
வலிமையைப் போரில் காண்போம்;
தன்பிறப் புரிமை யாகத்
தமிழ்மொழி போற்றக் காண்போம்.

- அ.முத்தரையனார், மலேசியக் கவிஞர்.

**குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுக.**

நாய்க்குட்டி - குழிக்குள் - கத்தும் சத்தம் - முகிலன் - முதலுதவி - பால் - தூங்கியது - வாலாட்டியது.

அன்றொருநாள் மாலைப் பொழுதில் முகிலன் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது, நாய்க்குட்டி கத்தும் சத்தம் கேட்டது. அவன் சுற்றும்முற்றும் பார்த்தான். ஆனால், அவன் கண்ணில் நாய்க்குட்டி படவே இல்லை. ஆனாலும் சத்தம் கேட்டது. அவன் அருகிலுள்ள குழிக்குள் எட்டிப் பார்த்தான். கத்தும் சத்தம் அங்கிருந்துதான் வந்தது. அதில் ஒரு நாய்க்குட்டி விழுந்து கிடந்தது. அதன்மேல் சிறிது அடிபட்டிருந்தது. அதனைக் கண்ட முகிலன் அந்தக் குட்டியை வெளியே எடுத்து, அதற்கு முதலுதவி செய்தான். அந்தக் குட்டிக்கு உரிமையாளர் யாரும் அருகில் இல்லாமையால் அந்தக் குட்டியைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று, பால் ஊற்றினான். அந்த நாய்க்குட்டியும் வயிறாரக் குடித்த பின் அங்கேயே தூங்கியது. சிறிது நேரத்திற்குப் பின் எழுந்து தன்னைப் பாதுகாத்த முகிலனைப் பார்த்து வாலாட்டியது. இக்கதையின் மூலம் உயிர்களிடத்தில் அன்பு மற்றும் இரக்கம் காட்டுதல் வேண்டும் என்ற அறத்தை சுட்டிக் காட்டுகிறது.

**அகராதியைப் பயன்படுத்தி பொருள் எழுதுக.**

1. கருணை - இரக்கம் - கஷ்டப்படுபவர்களைப் பார்த்து வரும் ஒருவகை பரிவு உணர்வு.
2. அச்சம் - பயம் - தைரியத்தை இழக்கும் நிலைமை.
3. ஆசை - விருப்பம் - ஒரு பொருள் மீது செலுத்தும் விருப்பம்.

**கீழ்க்காணும் பெயர்ச் சொற்களை அகவரிசையில் எழுதுக.**

பூனை, தையல், தேனீ, ஓணான், மான், வௌவால், கிளி, மாணவன், மனிதன், ஆசிரியர், பழம்

***ஆ**சிரியர், **ஓ**ணான், **கி**ளி, **தே**னி, **தை**யம், **ப**ழம், **பூ**னை, **ம**னிதன், **மா**ணவன், **மா**ன், **வௌ**வால்.*

**பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.**

1. <u>கைகள்</u> இரண்டும் பிறர்க்கு உதவவே எனச் சான்றோர் கருதினார். - சினைப்பெயர்
2. அறம், பொருள், இன்பம், வீடு <u>அடைதல்</u> நூலின் பயனாகும். - தொழிற்பெயர்
3. குழந்தை <u>தெருவில்</u> விளையாடியது. - இடப்பெயர்
4. நீதிநூல் பயில் என்கிறார் <u>பாரதியார்</u>. - பொருட்பெயர்
5. <u>மாலை</u> முழுதும் விளையாட்டு. - காலப்பெயர்
6. <u>அன்பு</u> நிறைய உடையவர்கள் மேலோர். - பண்புப்பெயர்

**பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக.**

| | | |
|---|---|---|
| விடியலில் துயில் எழுந்தேன். | - விடியல் | - காலப்பெயர் |
| இறைவனைக் கை தொழுதேன் | - கை | - சினைப்பெயர் |
| நான் மதுரைக்குச் சென்றேன் | - மதுரை | - இடப்பெயர் |
| புத்தகம் வாங்கி வந்தேன் | - புத்தகம் | - பொருட்பெயர் |
| கற்றலைத் தொடர்வோம் இனி | - கற்றல் | - தொழிற்பெயர் |
| நன்மைகள் பெருகும் நனி | - நன்மைகள் | - பண்புப்பெயர் |

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

அறம் செய விரும்பு

முன்னுரை

இன்றைய சமுதாயத்தில் மனிதப் பிறவி வாழ்வாங்கு வாழ அறவழிப் பாதை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு தனி மனித வாழ்க்கைக்கு அறநெறி அல்லது ஒழுக்க நெறி என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஒழுக்க நெறியின் மாற்று வடிவமே அறநெறியாகும். நாம் விண்ணுலகத்தில் சொர்க்கப் பயனை அனுபவிக்க மண்ணுலகில் அறநெறியின் கீழ் செயற்பட வேண்டும் என்பது எம் முன்னோர்களின் வாக்கு இதன் காரணமாகவே "அறம் செய்ய விரும்பு" என்று ஔவையார் தனது ஆத்தி சூடியில் குறிப்பிட்டுள்ளார்.

**அறம் என்பதன் பொருள்**

அறம் என்ற சொல்லிற்கு கடமை, நோன்பு, தர்மம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை போன்றன பொருள் கொள்ளப்படுகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என பொருள் கொள்ளப்படுகின்றது.
தனி மனித நடத்தை பெரும்பாலோரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கமெனும் பண்பாக மலர்ந்து வாழ்க்கை நெறியாக மாண்புற்றது அறம் ஆகும்.

**அறத்தின் சிறப்பு**

மக்களாய்ப் பிறந்த நாமெல்லாம் இம்மையிலும், மறுமையிலும் மேன்மை பெற்று வாழ வேண்டுமானால் அறத்தையே செய்ய வேண்டும். நாம் முற்பிறவியிலே செய்த அறத்தின் பயனாகவே மனித சரீரம் நமக்கு கிடைத்திருக்கின்றது. இப்பிறவியிலேயும் அறத்தைச் செய்வோமானால் மறுபிறப்பில் பேரின்பத்தைப் பெற முடியும். அறத்தைச் செய்வதற்கு கால வரையறையில்லை. இளமையில் செய்யக்கூடாது, முதுமையில் செய்ய வேண்டும் என்ற நியதி இல்லை. எப்பொழுதும் எந்நேரத்திலும் அறம் செய்யலாம். இந்த நிலையில்லாத உடம்பு இருக்கும் பொழுதே நிலையான அறத்தைச் செய்து நான்கு உறுதி பொருட்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைய வேண்டும்.

**ஔவையாரின் கருத்து**

ஒழுக்கநீதி தவறியவன் மறுபிறவியில் வாழத் தகுதியற்றவன் என்கின்றார் ஔவையார். மனிதப் பிறவி பெற்ற அனைவரும் அறத்தின் பாழ் கட்டுண்டு முதுமையில் பிறவிப் பயனை அடைய வேண்டும் என்கின்றார். இதனையே தனது நூலான ஆத்திசூடியில் முதல் வரியில் "அறம் செய்ய விரும்பு" என குறிப்பிடுகின்றார். எத்தனையோ பணம் படைத்தவர்கள் தாமும் அனுபவிக்காது பணத்தினை வீணாக்குகிறார்கள். மக்களாய்ப் பிறந்த நாமெல்லாம் இம்மையிலும், மறுமையிலும் மேன்மை பெற்று வாழ வேண்டுமானால் அறத்தையே செய்ய வேண்டும் என ஔவை மூதாட்டி குறிப்பிட்டுள்ளார்.

**வள்ளுவரின் கருத்து**

இவ்வுலகில் நிலையில்லாத உடம்பு இருக்கும்போதே நிலையான அறத்தைச் செய்து துணையைத் தேடிக்கொள்ள வேண்டும் என்கின்றார் வள்ளுவர். இதனையே இவர் தனது குறட்பாவில் "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" என குறிப்பிட்டுள்ளார். அறம் செய்வோரிடத்து நான்கு குற்றங்கள் இருக்கக் கூடாது என்று கூறுகின்றார் வள்ளுவர். அதாவது பொறாமை, அவா, வெகுளி, இன்னாச்சொல் போன்ற நான்கையும் களைந்தவனே அறஞ் செய்யும் ஆற்றல் உடையவனாகும் என்று குறிப்பிடுகின்றார். இக்குற்றங்களை உடையோர் செய்யும் அறம் அறமாகமாட்டாது இதுவே தெய்வப் புலவரின் அறம் பற்றிய தெளிவுரையாகும். இதனை பின்வரும் குறட்பாவின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். "அழுக்கா றவா வெகுளி யின்னாச்சொன் னாங்கு மிழுகாத வியன்ற தறம்" என குறிப்பிட்டுள்ளார். மேலும் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தின் மூலமும் அறம் பற்றி தெளிவாக குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

ஆரம்ப காலங்களில் வாழ்ந்த தமிழ் அரசர்கள் பல அறங்களையெல்லாஞ் செய்து வந்தார்கள். அன்றும் பாரத நாட்டிலே ஆலயங்கள் தோறும் ஆதீனங்கள் பல அறப்பணிகளையெல்லாம் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால், இன்று இவ்வறம் அருகி வரும் நிலையிலேயே காணப்படுகின்றது. பொதுவாக நோக்கும் பொழுது பிறவிப்பயனை தருவதும், அழியாப் பேரின்பத்தைத் தருவதும் அறமேயாகும். இத்தகைய மேலான அறத்தை செய்து பிறவிப் பயனை அடைந்து முக்தி பெற வேண்டும். இதன் காரணமாக நம் மனித வாழ்க்கையில் அறப்பணியை மேற்கொண்டு முடிவில் வீடு பேற்றை அடைந்து பிறவிப்பயனில் சொர்கத்தை நாட நாம் எத்தனிக்க வேண்டும். அறஞ்செய்யாது பிறவியாகிய கடலை நீந்தி கரை சேர முடியாது என்பது முன்னோர் வாக்காகும்.

# மொழியோடு விளையாடு

**கட்டங்களில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு தொடர்களை அமைக்க.**

| | | |
|---|---|---|
| வெல்லும் | கேளிர் | தீதும் |
| வாரா | நன்றும் | யாவரும் |
| யாதும் ஊரே | பிறர்தர | வாய்மையே |

வாய்மையே வெல்லும்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா

**சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துங்கள்**

1. சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.
2. மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.
3. சிறைச் சாலைக்குச் சென்று உணவிட்டாள்.
4. அமுதசுரபியைப் பெற்றாள்.
5. ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்.

**விடைகள்:**

1. மணிமேகலை மணிபல்லவத் தீவிற்குச் சென்றாள்.
2. அமுதசுரபியைப் பெற்றாள்.
3. ஆதிரையிடம் சென்று முதல் உணவைப் பெற்றாள்.
4. சிறைச் சாலைக்குச் சென்று உணவிட்டாள்.
5. சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுமாறு மன்னனிடம் வேண்டினாள்.

**ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1. அரம் - அறம்
   அரம் - கூர்மையான கருவி - இரும்பைத் தேய்த்துக் கூர்மையாக்குவதற்கு **அரம்** பயன்படும்.
   அறம் - தர்மம் - பழந்தமிழர்கள் **அறச்**செயல்களில் சிறந்து விளங்கினர்.
2. மனம் - மணம்
   மனம் - உள்ளம் - பிறருக்கு உதவி செய்வதற்கு நல்ல **மனம்** வேண்டும்.
   மணம் - வாசனை - மல்லிகை **மணம்** வீசுகிறது.

**இருபொருள் தருக.**

(எ.கா.) ஆறு – நதி
ஆறு – எண்

1. திங்கள் - சந்திரன்
   திங்கள் - மாதம்
2. ஓடு - வீட்டின் கூரையில் இருக்கும்
   ஓடு - ஓடுதல்
3. நகை - சிரிப்பு
   நகை - அணிகலன்

**புதிர்ச் சொல் கண்டுபிடி**

1. இச்சொல் மூன்றெழுத்துச் சொல். உயிர் எழுத்துகள் வரிசையில் முதல் எழுத்து இச்சொல்லின் முதல் எழுத்து. வல்லின மெய் எழுத்துகளின் வரிசையில் கடைசி எழுத்து இச்சொல்லின் இரண்டாம் எழுத்து. வாசனை என்னும் பொருள்தரும் வேறு சொல்லின் கடைசி எழுத்து இச்சொல்லின் மூன்றாம் எழுத்து. அ∴து என்ன?
   **விடை : அறம்**

**கட்டத்தில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்குக.**

| | |
|---|---|
| மாலையில் | கற்போம் |
| பிறருக்கு உதவி | எழுவோம் |
| பெரியோரை | விளையாடுவோம் |
| நூல் பல | செய்வோம் |
| உடற்பயிற்சி | புரிவோம் |
| அதிகாலையில் | வணங்குவோம் |

**விடை**

மாலையில் விளையாடுவோம்.
பிறருக்கு உதவி புரிவோம்.
பெரியோரை வணங்குவோம்.
நூல் பல கற்போம்.
உடற்பயிற்சி செய்வோம்.
அதிகாலையில் எழுவோம்.

**செயல்திட்டம்**

1. நீங்கள் சேவை செய்ய விரும்பும் பணிகளைப் பட்டியலிடுக.
   நான் சேவை செய்ய விரும்பும் பணிகள் :
   - இலவசமாக மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல்.
   - ஊனமுற்றோர்க்கு உதவுதல்.
   - விடுமுறை நாட்களில் வரும் திருவிழா மற்றும் பண்டிகைக் காலங்களில் போக்குவரத்துக் காவலர்களுக்கு உதவுதல்.
   - வாரத்திற்கு ஒருமுறை நான் வசிக்கும் தெரு மற்றும் நகரை நண்பர்களுடன் சேர்ந்து சுத்தப்படுத்துதல்.
   - சுற்றுச்சூழல் பாதுகாக்கும் வகையில் நெகிழிப் பயன்பாடுகளின் மூலம் வரும் தீமைகள் பற்றியும் மரங்களினால் வரும் நன்மைகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன்.
   - மக்களின் நலன்கள் மேம்படுவதற்கான செயல்களைச் செய்வேன்.
   - பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள சொல்லி நண்பர்களுடன் சேர்ந்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவேன்.

2. உயர்க்கு குறிக்கோளை அடைந்து வெற்றி பெற்ற சாதனையாளர்கள் தொகுப்பு ஒன்றைத் தயாரிக்க.
   மாணவர்கள் சொந்தமாக தயாரித்துக் கொள்ளவும்.

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்**

1. உணவை வீணாக்க மாட்டேன்.
2. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.
3. பயணம் செய்யும் போது தேவைப்படுவோருக்கு எழுந்து இடம் தருவேன்.
4. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவேன்.

**கலைச்சொல் அறிவோம்**

1. அறக்கட்டளை - Trust
2. தன்னார்வலர் - Volunteer
3. இளம் செஞ்சிலுவைச் சங்கம் - Junior Red Cross
4. சாரண சாரணியர் - Scouts & Guides
5. சமூகப் பணியாளர் - Social Worker

**இணையத்தில் காண்க.**

பொதுத்தொண்டு செய்யும் நிறுவனங்களின் பெயர்களை இணையத்தில் கண்டு திரட்டுக.

## வாழ்வியல் : திருக்குறள்

### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே ……. ஆகும்.
   அ) பகை **ஆ) ஈகை** இ) வறுமை ஈ) கொடுமை
2. பிற உயிர்களின் ……….க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.
   அ) மகிழ்வை ஆ) செல்வத்தை **இ) துன்பத்தை** ஈ) பகையை
3. உள்ளத்தில் ……. இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு **ஈ) குற்றம்**

**இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

வறியார்க்கு ஒன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
குறியெதிர்ப்பை உடைத்து நீரது.
எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
மாணாசெய் தலை யாமை.

**விடை:**

வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

**குறுவினா**

1. அறிவின் பயன் யாது?
   பிற உயிரின் துன்பத்தைத் தமது துன்பம் போல் கருதுவதே அறிவின் பயன் ஆகும்.
2. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
   தம்மிடம் இருப்பதைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து காப்பாற்ற வேண்டும்.
3. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?
   இல்லாதவர்க்கு தருவதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பயனை எதிர்பார்த்துச் செய்பவை ஆகும். இல்லாதவர்க்குத் தருவதால் உண்டாகும் இன்பத்தை அறியாதவர்கள் பொருளைச் சேர்த்து வைத்துப் பின் அதனை இழந்து விடுவார்கள்.

**பின்வரும் நிகழ்வைப் படித்து அதற்குப் பொருத்தமான திருக்குறள் எதுவெனக் காண்க.**

நிறைமதி அவளுடைய தோழிகளுடன் பூங்காவிற்குச் சென்றாள். அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். நண்பகல் நேரத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து தான் கொண்டு வந்திருந்த உணவைத் தோழிகளுடன் பகிர்ந்து உண்டாள். அவர்களின் அருகே பறவைகள் பறந்து வந்தன. தன்னிடம் இருந்த உணவைப் பறவைகளுக்கும் அளித்தாள்.

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற.
2. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
   மாணாசெய் யாமை தலை.
3. **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
   **தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**